# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

## தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு – 4

வாக்கு எண்ணுகை

**2013**

# கூட்டுறவுச் சங்கங்களின்
# நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்
# 2013

## தேர்தல் அலுவலர்களுக்கான
## துணைக் கையேடு – 4
**(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)**

வாக்கு எண்ணுகை

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
## தேர்தல் ஆணையம்
## சென்னை.

# உள்ளடக்கம்


| வ.எண். | பொருள் |
|---|---|
| 1. | பொது |
| 2. | வாக்கு எண்ணுகை மையங்கள் |
| 3. | வாக்கு எண்ணுகை தளவாடங்கள் மற்றும் எழுது பொருள் |
| 4. | வாக்கு எண்ணுகை அலுவலர்கள் மற்றும் முகவர்கள் |
| 5. | வாக்கு எண்ணுகை ஏற்பாடுகள் |
| 6. | வாக்கு எண்ணுகை |
| 7. | முடிவுகள் அறிவித்தல் |
| 8. | முடிவுரை |
| 9. | இணைப்புகள் |

# தேர்தல் அலுவலர்களுக்கான
# துணைக் கையேடு – 4

# வாக்கு எண்ணுகை

**1. பொது**

**1.1. முன்னுரை**

**1.1.1.** தேர்தல் நடவடிக்கையானது தேர்தல்களை அறிவிப்பு செய்யும் நிலையில் தொடங்கி, தேர்தல்களின் முடிவுகளை அறிவிப்பதுடன் நிறைவு பெறும். இவற்றில், வாக்கு எண்ணுகையும், முடிவுகளை அறிவித்தலும் முக்கிய நிலைகளாகும்.

**2. வாக்குப்பதிவு எண்ணுகை மையங்கள்**

**2.1. இடம் தெரிவு செய்தல்**

**2.1.1.** வாக்கு எண்ணுகை, சங்கத்தின் தேர்தல் அறிவிப்பில் அறிவிக்கபட்டபடியான இடம், நாள், நேரத்தில் நடத்தப்படும். ஒரு சங்கத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகள் இருப்பின் அவை குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஒன்று சேர்த்து வாக்கு எண்ணிக்கை நடைபெறும். பாதுகாப்பு காரணங்களுக்காகவோ, இட வசதி காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் உரிய காரணங்களுக்காகவோ மாவட்டத் தேர்தல் அலுவலர், மாநிலத் தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் ஆணையம் குறிப்பிடும் பொது இடத்தில், உரிய அறிவிப்பு செய்து சங்கத்தின் அல்லது சங்கங்களின் தொகுப்பிற்கு (Group of Societies) ஒரு பொதுவான இடத்தில் (Common Counting Centre) வாக்கு எண்ணுகை நடத்தலாம். வாக்கு எண்ணுகை எங்கு நடைபெற்றாலும், வாக்குப் பதிவு முடிவுற்ற நாளிலிருந்து வாக்கு எண்ணுகை முடியும் வரை வாக்குப் பெட்டிகளுக்கு தேவையான அளவு காவல் துறை பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**2.2. வாக்கு எண்ணுகை குறித்த சட்டப்படியான காப்புரைகள்**

**2.2.1** வாக்கு எண்ணுகை தொடர்பாக அனுசரிக்க வேண்டியவை பற்றி 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண் 52–ல் அளிக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணுகைக்குப் பொறுப்புடைய தேர்தல் அலுவலரும், வாக்குப்பதிவு அலுவலர்களும் (வாக்கு எண்ணுகை அலுவலர்கள்) வாக்கு எண்ணுகையை மேற்கொள்ளும் முன்னர் இவ்விதிமுறைகளையும் இக்கையேட்டில் அளிக்கப்பட்டுள்ள அறிவுரைகளையும் நன்கு படித்துணர்ந்து கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். ஏனெனில், வாக்கு எண்ணுகைக்

கூடத்தில் அடிக்கடி இவ்விதிமுறைகளையும், இக்கையேட்டினையும் பார்வையிடுவதால் வாக்கு எண்ணுகையின் முன்னேற்றம் தாமதமாகும். விதிமுறைகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளுக்கேற்ப வாக்குகள் எண்ணுகையும் முடிவுகளை அறிவித்தலும் தேர்தல் அலுவலர்களின் கடமைகளில் மிக முக்கியமான ஒன்றாகும்.

**2.3. பொதுவாக வாக்கு எண்ணுகையின் முறை**

**2.3.1.** கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடைபெறுவதில்லை. எனவே, போட்டியிடும் வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் கிடையாது. வேட்பாளர்களின் பெயர்களின் ஆங்கில மொழி அகரவரிசைப்படி வேட்பாளர்களுக்கு வரிசை எண்கள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

**2.4. வாக்கு எண்ணுகை மையங்கள் அமைப்பதற்கான வழி முறைகள் :**

2.4.1. ஒவ்வொரு சங்கத்திற்கும் குறைந்தது ஒரு வாக்கு எண்ணுகை மையம் இருக்கும். சில சங்கங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடி இருந்தால் வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையும் அதிக அளவில் இருக்கும். இத்தகைய நேர்வுகளில் வாக்கு எண்ணுகைக்கான இட வசதியைப் பொறுத்து ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கு எண்ணுகை மையங்கள் அமைக்கப் பெறும். பாதுகாப்பு கருதியோ, இதர வகையிலோ, போதிய காரணங்களுக்காக அனைத்துச் சங்கங்கள் மற்றும் வாக்குச்சாவடிகளுக்கான வாக்கு எண்ணிக்கையை பொதுவான ஓர் இடத்திலோ அல்லது இடங்களிலோ, மேற்கொள்வது மாவட்ட தேர்தல் அலுவலர், மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோரின் விருப்புரிமைக்குரியது. இவ்வாறான பொது வாக்கு மையம், சங்கம் அல்லது சங்கங்களின் தொகுப்புகள் (Group of Societies) உள்ள வருவாய் வட்டத்திலுள்ள (Revenue Taluk) எந்த ஒரு பொது இடத்திலும் அமைக்கப்படலாம். மாவட்டத் தேர்தல் அலுவலரால் நியமிக்கப்பட்டு இருக்கும் தேர்தல் அலுவலர், தேர்தல் அலுவலரால் தேவைக்கேற்ப நியமிக்கப் பெறும் முதன்மை வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் ஆகியோர் வாக்கு எண்ணுகை மையங்களில் ஒவ்வொரு சங்கம் தொடர்பான வாக்கு எண்ணுகைக்கும் பொறுப்பாக இருப்பார்கள். வாக்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்து, அவற்றை எண்ணுவதற்கு ஒரு மேசையே போதுமென்ற நிலையில் தேர்தல் அலுவலர் அந்த மேசைக்கும் வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தலுக்கும் முழுப் பொறுப்பாவார். ஒன்றுக்கு மேற்பட்ட மேசைகள் இருக்கும் நிலையில் ஒவ்வொரு மேசைக்கும் முதன்மை வாக்குப் பதிவு அலுவலரே பொறுப்பாவார். தேர்தல் அலுவலர் அனைத்து மேசைகளிலும் நடைபெறும் எண்ணுகைக்கு ஒட்டு மொத்த பொறுப்பாவர். முதன்மை வாக்குப்பதிவு அலுவலர்கள் முடிவுகள் அறிவித்தல் தவிர்த்து வாக்கு எண்ணுகை தொடர்பான தேர்தல் அலுவலரின் அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவார்கள்.

தேர்தல் அலுவலர் வாக்கு எண்ணுகை விபரங்களை வாக்கு எண்ணுகை சரிபார்ப்பு குறிப்பில் **(இணைப்பு -1)**-ல் முதன்மை வாக்குப்பதிவு அலுவலர்களிடமிருந்து பெற்ற விபரங்களை **(இணைப்பு -2)** ஒருங்கிணைத்து தேர்தல் முடிவுகளை அறிவிப்பார்.

**2.5 வாக்கு எண்ணுகை மையத்தின் அளவு மற்றும் வாக்கு எண்ணும் பணியாளரின் எண்ணிக்கை**

2.5.1. ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மையத்திலும் வரவேற்பு அறையை தவிர்த்து பின்வரும் இரண்டு வகையான அறைகள் அல்லது கூடங்கள் இருக்கும்.

(1) சேமிப்பறை

(2) வாக்கு எண்ணுகைக் கூடங்கள் / அறைகள்

**2.6. சேமிப்பறை**

2.6.1. ஒரு சங்கத்தின் அல்லது சங்கத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அல்லது பல்வேறு சங்கங்களின் பல்வேறு வாக்குச் சாவடிகளுக்கு பொது வாக்கு எண்ணுகை மையம் இருக்கும் நேர்வுகளிலும், ஒரு வாக்கு எண்ணுகை மையத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறு வாக்குச்சாவடிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பதிவான வாக்குப்பெட்டிகள் அனைத்தையும் வைப்பதற்கான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேமிப்பறை / அறைகள் இருக்க வேண்டும். அறையின் அளவானது, வைக்கப்பட இருக்கும் வாக்குப்பெட்டிகளின் எண்ணிக்கையைப் பொருத்ததாகும்.

**2.7. வாக்குச்சீட்டுகளை பிரித்தல் மற்றும் தொடக்க எண்ணுகை கூடம்**

2.7.1 சராசரியாக ஒவ்வொரு 1,000 வாக்குச்சீட்டுகள் வரையிலும் மேசை ஒன்று இருக்கும். போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு இடப்பட்ட குறியீடுகளை எண்ணுவதற்கான நேரம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மேசைகளின் எண்ணிக்கை இருக்க வேண்டும். வாக்கு எண்ணுகைக் கூடத்தின் அளவும், எண்ணிக்கையும், ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மையத்திற்கு தேவைப்படும் மேசைகளின் மொத்த எண்ணிக்கையைப் பொருத்து இருக்கும்.

**2.7.2.** தேர்தல் அலுவலர் ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மையத்திலும் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணுகை மேசைகளின் (counting table) எண்ணிக்கையை வாக்குச் சீட்டுகள் மற்றும் வேட்பாளர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் வாக்குப்பதிவு நாளுக்கு முன்னரே மாவட்டத் தேர்தல் அலுவலரின் ஆலோசனையைப் பெற்று நிர்ணயிக்க வேண்டும். சராசரியாக, வாக்குப் பிரிப்பு மேசை ஒவ்வொன்றுக்கும் தோராயமாக 80–லிருந்து 100 சதுர அடி வரையான கட்டடப்பரப்புத் தேவைப்படும்,

**2.7.3.** ஒரு மேசைக்கு ஒரு தேர்தல் அலுவலர் / முதன்மை வாக்குப்பதிவு அலுவலர் தேவைக்கேற்ப இரண்டு அல்லது மூன்று உதவியாளர்களடங்கிய ஒரு வாக்கு எண்ணுகைக்

குழு என்ற விகிதத்திலும், வாக்கு எண்ணுகை முகவர்கள் ஆகியோர் அமர்வதற்கு ஏற்ப போதுமான அளவில் இடவசதியும் இருத்தல் வேண்டும்.

**2.7.4.** ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மேசையிலும் மற்றும் தேர்தல் அலுவலர் மேசையிலும் வேட்பாளர்களின் வாக்கு எண்ணுகை முகவர்களுக்கு இருக்கைகள் அமைக்கப் பெற வேண்டும்.

**2.8. கட்டடத்தைத் தெரிவு செய்தல்**

2.8.1. வாக்கு எண்ணுகை மையத்தை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் மேலே கூறப்பட்டுள்ள அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டுவிட்டதா என மாவட்டத் தேர்தல் அலுவலரும், தேர்தல் அலுவலரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாவட்டத் தேர்தல் அலுவலர், தேர்தல் அலுவலர் ஆகியோர் பின்வருவனவற்றையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(1) வாக்கு எண்ணுகை மையத்தை தெரிவு செய்கையில் காவல் துறையினருடன் கலந்தாலோசித்தல்.

(2) அனைத்து வாக்குச் சாவடிகளிலிருந்தும் வாக்கு எண்ணும் மையத்தை எளிதாகச் சென்றடையவும், வாக்குப் பெட்டிகளை விரைந்து எடுத்துச் செல்லவும் ஏதுவாக மைய இடத்தில் அல்லது முதன்மைச் சாலையில் அமைந்துள்ள நிலை

(3) அனைத்து தொலை தொடர்பு வசதிகள்.

(4) வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள், வாக்கு எண்ணுகை முகவர்கள் ஆகியோர் காத்திருக்க வேண்டி போதுமான திறந்த வெளி.

(5) வாக்கு எண்ணுகைப் பணி மேற்கொள்ளப்படவுள்ள அனைத்துஅறைகளிலும் மின்சாரம், காற்றோட்டம் மற்றும் கூடுதல் விளக்கு வசதி.

(6) மின்தடை காரணமாக, சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு உடனடி விளக்கு வசதிகள் மின் ஆக்கி மற்றும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் போன்ற போதிய மாற்று ஏற்பாடுகள்.

(7) தகவல்களை அளிப்பதற்குரிய கரும்பலகைகள்.

(8) போதிய அளவு குடிநீர் வசதி.

(9) வேட்பாளர்கள் அவர்களின் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்களுக்கு கழிவறை வசதி

(10) தீ அல்லது மழை, வெள்ளம் முதலான இயற்கை பேரிடருக்கெதிராகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

**2.9. வாக்கு எண்ணுகைக் கூடம் / அறை**

2.9.1.ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கு எண்ணுகை மேசைகள் இருக்கும் நேர்வுகளில் வாக்கு எண்ணுகை அறை / கூடம் ஒவ்வொன்றிலும் தேர்தல் அலுவலர் அல்லது முதன்மை வாக்குப் பதிவு அலுவலர் ஒருவர், வாக்கு எண்ணுகை அறை / கூடத்திற்குள் உயர்த்தப்பட்ட நடைமேடையிலிருந்து அனைத்து வாக்கு எண்ணுகை மேசைகளையும் சுலபமாக மேற்பார்வையிடும் விதத்தில் அமர்ந்திருக்க வழிவகை செய்திருத்தல் வேண்டும்.

**2.10. வாக்கு எண்ணுகை மேசை**

**2.10.1.** வாக்கு எண்ணுகை மேசையின் ஒருபுறத்தில் தேர்தல் அலுவலர் / முதன்மை வாக்குப்பதிவு அலுவலரும், அதன் மறுபுறத்தில் வாக்குப்பதிவு அலுவலர்களும் அமர்ந்திருப்பர்.

**3. வாக்கு எண்ணுகைத் தளவாடங்கள் மற்றும் எழுது பொருள்**

**3.1. தளவாடங்கள்**

**3.1.1.** தேர்தல் அலுவலர் வாக்கு எண்ணுகை உதவியாளர்கள் வாக்கு எண்ணுகை முகவர்கள் ஆகியோருக்குத் தேவைப்படும் எண்ணிக்கையில் மேசைகள், நாற்காலிகள் அல்லது நீள் இருக்கைகள் (Bench), மற்றும் எழுது பொருட்கள் வாக்கு எண்ணுகை மையங்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

**3.2 ஒவ்வொரு மேசைக்குமான வாக்கு எண்ணுகைத் தட்டுகள் (Trays)**

**3.2.1.** வாக்குகளை எண்ணுவதற்கு ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மேசையும் வாக்குச்சீட்டுகள் வைப்பதற்கான தட்டுகள் (tray) கொண்டிருக்க வேண்டும். தட்டின் ஒவ்வொரு அறையும் வாக்குச்சீட்டுகளை வைப்பதற்கு போதுமான அளவில் பெரியதாக இருக்க வேண்டும். விலைமலிவான மரத்தில் செய்யப்பட்ட தட்டுகளை உள்ளூரில் தயாரித்து கொள்ளலாம்.ஐயத்திற்குரிய மற்றும் மறுக்கப்பட்ட (Rejected), வாக்குச்சீட்டுகளுக்கென கூடுதலாக தட்டுகள் இருக்க வேண்டும்.

**3.3 தேர்தல் அலுவலர் மற்றும் முதன்மை வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான (வாக்கு எண்ணுகை) தட்டுகள்**

**3.3.1.** தேர்தல் அலுவலருக்கும் முதன்மை வாக்குப்பதிவு அலுவலருக்கும் செல்லத்தக்க வாக்குச்சீட்டுக்களை சரிபார்ப்பதற்கும், ஐயத்திற்குரியவற்றைப் பிரிப்பதற்கும் என இரண்டு தட்டுகள் இருக்க வேண்டும். தட்டில் இருக்க வேண்டிய அறைகளின் எண்ணிக்கையானது, தள்ளுபடி செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகளில் 'தள்ளுபடி செய்யப்பட்டக் குறியீட்டு இனங்களின் எண்ணிக்கைக்கு' ஒன்றும், 'வெற்றுப் பகுதியில் தள்ளுபடி செய்யப்பட்டக் குறியீட்டுக்கு' ஒன்றும், 'பன்முறை வாக்குப்பதிவுகள் செய்தமைக்காகத் தள்ளுபடி செய்யப்பட்ட இனங்களுக்காக' ஒன்றும் 'மற்ற வகையில் தள்ளுபடி

செய்யப்பட்டவைகளுக்காக' ஒன்றும் என நான்கு வகைத் தள்ளுபடிக்கு என நான்கு கூடுதல் அறைகள் இருத்தல் வேண்டும்.

**3.4 எழுது பொருள்**

**3.4.1.** ஒவ்வொரு மேசையிலும் பின்வரும் எழுது பொருட்களும் இதர இனங்களும் தேவை:

**(1)** எழுது கோல்கள் (பென்சில்)

**(2)** இரு முழு வெள்ளைத்தாள்கள்

**(3)** சிறிய கிண்ணத்தில் ஈரமான கடற்பஞ்சு அல்லது தண்ணீர்.

**(4)** முறுக்கு நூல் அல்லது இரப்பர் பேண்டு

**(5)** தாள் இருத்திகள் அல்லது சிறு கற்கள் (paper weights or small stones).

(6) அடிக்கோல்

**3.4.2.** தேர்தல் அலுவலர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட எழுதுபொருட்கள் இருப்பில் இருப்பின் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் அல்லது உள்ளூரிலேயே பெறலாம்.

**4. வாக்கு எண்ணுகை அலுவலர்கள் மற்றும் முகவர்கள்**

**4.1.அலுவலர்கள்**

4.1.1. தேர்தல் அலுவலர், தேவைப்படும் நேர்வுகளில் அவரால் இப்பணி தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட தலைமை வாக்குப்பதிவு அலுவலர், மற்றும் வாக்குப் பதிவு அலுவலர்களுடன் மேற்கொண்டு அவருக்கு உதவி புரிவதற்குத் தேவைப்படும் உதவியாளர்களும் இருப்பார்கள்.

**4..2. வாக்கு எண்ணுகைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்**

**4.2.1.** வாக்கு எண்ணுகையில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கும் உதவியாளர்களுக்கும் பயிற்சி வகுப்பு ஒன்றை மாவட்ட தேர்தல் அலுவலர் நடத்த வேண்டும். மேலும், வாக்கு எண்ணுகை அலுவலர்களை வாக்குப்பதிவு நாளுக்கு முன்னர் வாக்கு எண்ணுகை மையங்களுக்கு வரவழைத்து அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை தேர்தல் அலுவலர் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குதல் வேண்டும். இதனால், வாக்கு எண்ணுகையானது குழப்பம் அல்லது இடையூறு ஏதுமின்றி குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற வழிவகுக்கும்.

**4.3. வாக்கு எண்ணுகை முகவர்கள்**

**4.3.1.** ஒவ்வொரு வேட்பாளர், அவரது ஒரு தேர்தல் முகவர், அவருக்கென தேர்தல் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் (counting agents) ஆகியோர் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் போது உடனிருக்க உரிமை பெற்றவராவார். இதற்கு படிவத்தில் வேட்பாளர் தேர்தல் அலுவலரிடம் விண்ணப்பிக்கவேண்டும் **(இணைப்பு -3)** தேர்தல் தொடர்பாக ஏற்கனவே பணியில் இருப்போர் மற்றும் வாக்கு

எண்ணிக்கைக்கு உதவிட தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்டவர் தவிர வேறு எந்த ஒரு நபரும் வாக்கு எண்ணிக்கையின்போது இருக்க அனுமதிக்கக் கூடாது.

**4.4 வாக்கு எண்ணுகை முகவர்களுக்கான அடையாள அட்டை (Badges)**

**4.4.1** வாக்கு எண்ணுகை முகவர் ஒவ்வொருவரும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றை அணிந்திருக்க வேண்டும். **(இணைப்பு-4)** அந்த அடையாள அட்டையானது, முகவர் மற்றும் வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரியையும் அதே போன்று அவர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கு எண்ணிக்கை மேசை இருக்குமாயின் அவர் எந்த மேசையின் வாக்கு எண்ணுகையை கவனிக்கிறார் என்ற விவரங்களையும் குறித்திருக்க வேண்டும். குறியீட்டுச் சின்ன அட்டையில் குறிப்பிட்ட மேசைக்கு அப்பால் இடம் பெயர்வதற்கு அவரை அனுமதிக்கக் கூடாது.

**4.4.2** வாக்கு எண்ணுகையைக் கவனிப்பதற்கு மட்டும் வாக்கு எண்ணுகை முகவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். வாக்குச்சீட்டு எதையும் அவர்கள் கையாள்வதற்கு அனுமதிக்கக்கூடாது. ஏதாவதொரு வாக்குச்சீட்டுகளின் தொடர் எண்ணைக் குறித்துக் கொள்வதற்கும், அவ்வாக்கு யாருக்காகப் பதியப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கும் கூட அவர்களை அனுமதிக்கக்கூடாது. வாக்கு எண்ணுகையில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மேசைகள் இருக்கும் நிலையில் அவர்கள் மனநிறைவடையாது இருக்கும் வாக்கு எண்ணுகை மேசை எண் வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர் மற்றும் அதற்கான காரணங்கள் ஆகியவற்றை வெறுமனே குறித்துக் கொள்ளலாம்.

**5. வாக்கு எண்ணுகை ஏற்பாடுகள்**

**5.1. வாக்கு எண்ணுகைக்குரிய நாள், நேரம் மற்றும் இடம்**

**5.1.1.**

(1) வாக்குகளை எண்ணுவதற்காக நாள், நேரம், இடம் ஆகியவை குறித்து முன்கூட்டியே மாநில தேர்தல் ஆணையத்தின்/ மாவட்டத் தேர்தல் அலுவலரின் ஆணைப்படி செயல்பட வேண்டும்.

(2) வாக்கு எண்ணுகை நிர்ணயிக்கப்பட்ட நாளன்று காலை 10.00 மணிக்குத் தொடங்க வேண்டும்.

**5.2. வாக்கு எண்ணுகை வரையறைகளும் செயல்முறைகளும்**

5.2.1 வாக்குப்பதிவு முடிவுற்றதிலிருந்து வாக்கு எண்ணும் நாள் வரை உள்ள மூன்று நிலைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) முதனிலை ஏற்பாடுகள்

(2) வாக்குப்பெட்டிகளைத் திறத்தல்.

**(3)** ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வாக்கு எண்ணுகை மேசையிலிருந்தும் பெற்று, வாக்குகளின் மொத்த எண்ணிக்கையைத் தொகுத்து தேர்தல்களின் முடிவுகளை அறிவித்தல்.

### 5.3. ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் மற்றும் சங்கங்களின் தொகுப்புக்கான பொதுவாக்கு எண்ணுகை மையங்கள் (common counting centre)

5.3.1 ஏற்கெனவே பத்தி **1.2.1.**-மற்றும் **2.1.1**-ல் விவரித்தபடி பல்வேறு சங்கங்களின் தொகுப்பிற்கு ஒரு பொதுவான வாக்கு எண்ணுகை மையம் (Common Counting Centre) இருக்கும் நேர்வுகளில் பல்வேறு சங்கங்களின் வாக்குப் பெட்டிகள் பெறுவதிலோ, அல்லது பாதுகாப்பில் வைப்பதிலோ, அல்லது வாக்கு எண்ணுகைக்கு ஒப்படைப்பதிலோ எவ்வித குழப்பங்களும் ஏற்படாதவாறு மிகக் கவனமுடனும் பொறுப்புடனும் செயல்படுதல் மிக அவசியமானதாகும்.

### 5.4. வாக்குப்பெட்டிகளையும் ஆவணங்களையும் பெறுதல்

5.4.1 வாக்குப்பதிவு நாளன்று, வாக்குப்பதிவு நிறைவுற்றதும், பாலித்தீன் பைகள் மற்றும் கேன்வாஸ் பைகளிலும் வைக்கப்பட்டுள்ள வாக்கு பெட்டிகளும், கோணிப்பைகளில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள், வாக்குப்பதிவுப் பொருள்கள் ஆகியவற்றையும் அம்மண்டலத்திற்குத் தொடர்புடைய அனைத்துச் சாவடிகளிலிருந்தும் திரட்டப்படும். இவை பொது வாக்கு எண்ணுகை மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அம்மையத்தின் இதற்கென மாவட்ட தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்ட வரவேற்பு அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். அவற்றை ஒவ்வொரு இனமாக அவர் சரிபார்த்துப் பெற்றுக்கொண்டு பாதுகாப்பு அறையில் வைப்பார். வாக்குப் பெட்டிகள் வாக்குப்பதிவு இடங்களிலிருந்து, பாதுகாப்பு அறையில் சேர்க்கப்படும் வரை காவல் துறையினர் பாதுகாப்பு இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

**5.4.2.** இப்பொருள் இரவு பகல் எந்நேரமானாலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். பொருள்களையும் ஏனைய பிற முக்கியத் தேர்தல் ஆவணங்களையும் முறையாகவும் முழுமையாகவும் ஒப்படைத்துள்ளமை தொடர்பாக வரவேற்பு அலுவலர் சரியாக உள்ளது என்று தெரிவித்த பின்னரே மண்டல அலுவலரை விடுவிக்க வேண்டும்.

**5.4.3** வாக்கு எண்ணுகை மையத்திற்குரிய வாக்குச்சாவடிகள் அனைத்திலிருந்தும் பொறுப்பு ஒப்படைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பெற்ற பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டது தொடர்பாக வரவேற்பு அலுவலர்கள் சரியாக உள்ளன என்பதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். வாக்குப்பெட்டிகள் அல்லது தேர்தல் ஆவணங்கள் எவையேனும் ஒப்படைக்கப்பெறவில்லையெனில், வரவேற்பு அலுவலர் அல்லது அம்மையத்திற்குப் பொறுப்பேற்று இருக்கும் பொறுப்பு அலுவலர் உடனடியாகத் தலையிட்டு விடுபட்ட

வாக்குப்பெட்டிகளையும் அல்லது தேர்தல் ஆவணங்களையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**5.4.4.** மாவட்ட தேர்தல் அலுவலர் சங்கத்தின் தேர்தல் அலுவலர் மற்றும் வரவேற்பு அலுவலர்களுடனும் மண்டல அலுவலர்களுடனும் இடைவிடாது தொடர்பு வைத்துக்கொண்டு, வாக்களிக்கப்பெற்ற வாக்குப் பெட்டிகள் அனைத்தும் பெற்றுக்கொள்ளப்படுவது பற்றி கவனித்து உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும், அனைத்து வாக்குச்சாவடிகளிலிருந்தும் அனைத்து வாக்குப்பெட்டிகளும் விடுதல் இல்லாமலும், வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர் இயன்ற அளவு விரைவாகவும் பெற்றுக் கொள்ளப்படுகின்றனவா என்பதையும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

**5.4.5.** வாக்களிக்கப்பெற்ற வாக்குப் பெட்டிகள் எவையும் மோசடி செய்யப்படவில்லை என்பதை வரவேற்பு அலுவலர் சரிபார்த்து உறுதி செய்து கொள்வதுடன், வாக்கு எண்ணும் பணி முடிவுபெறும்வரை இரவும் பகலும் அவ்வாக்குப்பெட்டிகள், வாக்குச்சாவடிகளின் தொடர் எண் வரிசை முறையிலும், வாக்குப் பெட்டிகளுக்குரிய தொடர் எண் வரிசை முறையிலும் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட ஆவன செய்தல் வேண்டும்.

**5.4.6.** வரவேற்புஅலுவலர், மண்டல அலுவலர் ஒவ்வொருவரிடமிருந்தும் தேர்தல்கள் தொடர்பான வாக்குச்சீட்டுக் கணக்குகளையும், அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் உரிய தாள் முத்திரைக் கணக்கினையும் விடுதலின்றி பெற்றுக்கொண்டு பாதுகாப்பு அறையில் வாக்குப் பெட்டிகளுடன் கூடவே அவற்றைத் தனியாக வைத்திருத்தல் வேண்டும். வாக்கு எண்ணுகைக் கூடத்திற்கு அவ்வாக்குப்பெட்டிகள் அளிக்கப்படும் போது அவ்வாக்குப் பெட்டிகளுடன், தொடர்புடைய வாக்குச்சீட்டுக் கணக்குகளையும் தாள் முத்திரைக் கணக்குகளையும் விடுதலின்றி அவ்வறைகளுக்கு அனுப்புதல் வேண்டும்.

**5.5. வாக்களிக்கப்பட்ட வாக்குப்பெட்டிகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தல்**

**5.5.1.** வாக்களிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தல் தொடர்பாகப் பின்வரும் ஏற்பாடுகள் வாக்கு எண்ணுகைக்கு முன் செய்யப்படுதல் வேண்டும்.

**(1)** முன்னரே கூறப்பட்டவாறு சந்தேகத்திற்கும் தவறுக்கும் இடங்கொடாத வகையில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக வாக்களிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளை வாக்குச்சாவடிகளிலிருந்து சேகரித்து பாதுகாப்புடன் கொண்டுசென்று, வாக்கு எண்ணுகை மையத்தில் தகுந்த பாதுகாப்பு அறையில் வைத்தல் வேண்டும்.

**(2)** வாக்குப்பெட்டிகளை, அதற்கென்றே பாதுகாப்பாகத் தனியாக உள்ள அறையில் அல்லது கூடத்தில் வைப்பு அறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(3) வாக்குப்பெட்டிகள் சங்கங்கள் மற்றும் வாக்குச் சாவடிகள் வாரியாக முன்னதாகவே குறியிடப்பெற்ற இடங்களில் வைக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் பெட்டிகளை எளிதிற் கண்டறிந்து வாக்கு எண்ணுகைக்கு வழங்கிட இயலும். ஒரு வாக்குச்சாவடியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பெட்டிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் நேர்வில் முதல் பெட்டியைத் தரையிலும், இரண்டாம் பெட்டியை முதற்பெட்டியின் மேலும், அவ்வாறே அடுத்தடுத்தும் வைத்தல் வேண்டும். இவ்வாறு வைக்கப்படுகையில் எவ்வகையிலும் பெட்டிகளின் மேல் இடப்பட்டுள்ள முத்திரைகள் சிதைந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வாக்குச்சாவடியில் மூன்று பெட்டிகள் பயன்படுத்தப் பட்டிருக்கும் நிலையில், முன்னரே குறிப்பிடப் பெற்றவாறு மூன்று வாக்குப்பெட்டிகளையும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைத்து, வாக்குச்சீட்டுக் கணக்குகள் அடங்கிய உறை மற்றும் தாள் முத்திரைக் கணக்கு அடங்கிய உறை ஆகியவற்றை மூன்றாவது பெட்டியின் மீது வைத்தல் வேண்டும்.

(4) இவ்வறை எந்த ஒரு அலுவலரோ பொது மக்களோ சாதாரண அலுவலின் பொருட்டு உள்ளே செல்லமுடியாத வகையிலும் மற்றும் உள்ளே செல்லத் தேவை இல்லாத வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.

(5) அனுமதி அளிக்கப்படாத எவரும் அவ்வளாகத்திற்குள் நுழையவோ, சாதாரண சூழ்நிலையில் எவரும் அக்கூடத்திற்குள் நுழையவே அனுமதிக்கக்கூடாது.

(6) வாக்குப்பெட்டிகள் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்த பின்னர் அறை பூட்டப்பட்டு – பொது வாக்கெடுப்பு மையம் என்றால் மாவட்ட தேர்தல் அலுவலராலும், ஒரு சங்கம் அல்லது அச்சங்கத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகள் என்றால் அச்சங்க தேர்தல் அலுவலராலும் அவர்களது முத்திரையால் முத்திரையிடப்பட வேண்டும். அறையின் கதவு மற்றும் சன்னலில் மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் அலுவலர் வைக்கும் முத்திரைக்கு அருகில் வேட்பாளர்கள் தங்கள் முத்திரைகளை வைக்க விரும்பினால் அவர்களது முத்திரைகளை வைக்கலாம். பூட்டினைத் திறப்பதற்குரிய மூலத் திறவுகோலை மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் அலுவலர் வைத்திருத்தல் வேண்டும். வாக்கு எண்ணும் நாளன்று காலை 10.00 மணிக்குத் திறக்கப்படும் வரை அவ்வறையின் காவல் பணிக்காக உள்ள காவலரிடம் அறையின் இரண்டாவது திறவுகோல் அளிக்கப்படல் வேண்டும்.

(7) பூட்டப்பட்ட அறையில் தத்தம் முத்திரைகளைப் பதித்த வேட்பாளர்களை, வாக்கு எண்ணும் நாளன்று அப்பணி தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குக் குறைந்தது ஒரு மணிநேரம் முன்னதாகப் பாதுகாப்பு அறையின் முத்திரைகளை சரிபார்ப்பதற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளுதல் வேண்டும். இருந்தபோதிலும் மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் அலுவலர் அறையைத் திறக்க கடைசி நிமிடம் வரை காத்திருக்கத் தேவையில்லை.

**5.6. வாக்கு எண்ணுகைச் செயல் முறைத்திட்டம்**

**5.6.1.** வாக்களிக்கப்பட்டுள்ள மொத்த வாக்குச் சீட்டுகளின் (polled votes) எண்ணிக்கைக்கேற்ப, தேவையைப் பொறுத்து, அமைக்கப்பட வேண்டிய வாக்கு எண்ணுகை மேசைகள், வாக்குகள் எண்ணுகைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவை பற்றி முன்னதாகவே நன்கு கணக்கிடப்படவேண்டும்.

**5.6.2.** உதாரணமாக ஒரு வாக்குச்சாவடியில் பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் 1000 வாக்குச் சீட்டுகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாக்குகள் எண்ணுகை இருக்குமாதலால் அதற்கான நேரத்தை உத்தேசமாக கணக்கிட்டு வாக்கு எண்ணும் பணி முழுமையாக முடிக்கப்படுவதற்குரிய அதிகபட்ச நேரம் 8 முதல் 10 மணி என்ற வகையில் மேசைகள் மற்றும் அலுவலர்கள் எண்ணிக்கை திட்டமிடப்படவேண்டும்.

## 5.7. அனுமதி

**5.7.1.** வாக்கு எண்ணுகை மையங்களுக்குள் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள்

(1) தேர்தல் அலுவலர் / தேர்தல் அலுவலரால் உரியவாறு நியமிக்கப்பெற்ற வாக்குப்பதிவு எண்ணுகை அலுவலர் மற்றும் வாக்கு எண்ணுகை உதவியாளர்கள்.

(2) காவல்துறை அலுவலர்கள் தவிர்த்து மாவட்டத் தேர்தல் அலுவலரால் அதிகாரமளிக்கப்பெற்ற தேர்தல் தொடர்புடைய பணியிலிருக்கும் பொதுப் பணியாளர்கள்.

(3) மாவட்டத் தேர்தல் அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் மாநில் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பெற்ற தேர்தல் பார்வையாளர்கள்.

(4) வேட்பாளர்கள், அவர்களின் தேர்தல் முகவர்கள் (ஒரு வேட்பாளருக்கு ஒருவர் மட்டும்) மற்றும் தேர்தல் அலுவலர் நிர்ணயிக்கும் எண்ணிக்கையில் வாக்கு எண்ணுகை முகவர்கள்.

**5.7.2** வாக்கு எண்ணுகைக் கூடத்திற்குள் நுழைபவர் எவரையும் பாதுகாப்புக் காரணம் கருதி அனுமதி மறுப்பதற்குத் மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு / தேர்தல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. வாக்கு எண்ணுகைக் கூடத்திற்குள் நுழைய அனுமதிக்கும் முன்னர் எந்தவொரு நபரையும் குடிபோதை குறித்து ஆராயப்படவோ, சோதனை செய்யப்படவோ வேண்டுமென்று அவர் பணிக்கலாம். ஒவ்வொரு மேசைக்கும் அமர்த்தப்பட்டுள்ள முகவர்கள் வாக்கு எண்ணுவதைத் கவனிப்பதற்கு இயலும் வகையில் போதிய இருக்கை ஏற்பாடுகளைத் தேர்தல் அலுவலர் செய்து தருதல் வேண்டும். தேர்தல் அலுவலரின் கட்டளைகளுக்கு வேண்டுமென்றே பணிய மறுக்கும் எவரையும் வாக்கு எண்ணுகைக் கூடத்தில் இருந்து அகற்றுவதற்கு தேர்தல் அலுவலர் ஆணையிடலாம். குடை, பைகள், ஊன்று கோல் கைபேசி (mobile phone), பேஜர் (pager) போன்றவற்றை வாக்கு எண்ணுகைக் கூடத்திற்குள் எடுத்துச் செல்ல எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 5.8. ஒழுங்கு மற்றும் அமைதி ஆகியவற்றை வாக்கு எண்ணுமிடத்தில் பேணுதல்

5.8.1. வாக்கு எண்ணுகை அறை / கூடம் ஒவ்வொன்றின் கதவு அல்லது கதவுகளின் அருகில் காவல் பணிக்காகப் போதிய எண்ணிக்கையில் காவலர்கள்

பணியமர்த்தப்பட்டுள்ளனர் எனத் மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் அலுவலர் பார்வையிட்டு உறுதி செய்துகொள்ளவேண்டும். அவரின் அனுமதியின்றி எவரும் அறைக்குள் நுழையவோ அல்லது அறையை விட்டு வெளிச்செல்லவோ கூடாது. வாக்களிக்கப்பெற்ற வாக்குப் பெட்டிகளைப் பாதுகாப்பு அறையிலிருந்து எடுத்துவரும் வழியிலும் அவற்றை பல்வேறு வாக்கு எண்ணுகை அறைகளுக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், காவலர்கள் போதிய அளவில் தடை அரண் செய்து (Barricade) பாதுகாத்து வருவதையும் அவர் உறுதிசெய்து கொள்ள வேண்டும். மாநில தேர்தல் ஆணையத்திடமிருந்தும் / மாவட்டத் தேர்தல் அலுவலரிடமிருந்தும் தனிப்பட்ட அதிகாரமளிப்பைப் பெற்றவர்கள் மட்டுமே வாக்கு எண்ணுகை அறைக்குள் நுழையும் வகையிலும் ஏனையவர் நுழையாதவாறும் அவர் கட்டுப்படுத்துதல் வேண்டும். எண்ணுகை முகவர்கள் தமது அடையாள அட்டையை உள்ளே செல்லும் போது காண்பித்தல் வேண்டும். ஒருமுறை அம்மையத்தை விட்டு அவர்கள் சென்றுவிட்டால் மறுபடியும் உள்ளே வருவதற்கு அவர்களை அனுமதிக்கக் கூடாது.

**5.8.2.** கண்டிப்பும் கட்டுப்பாடும் மேலோங்கியிருத்தலையும் செயலுக்கு ஒத்த முறையில் வாக்கு எண்ணும் பணி நடைபெறுதலையும் உறுதி செய்தல் வேண்டும். மாவட்ட தேர்தல் அலுவலரின் / தேர்தல் அலுவலரின் கட்டளைகளை ஏற்க மறுப்பவர் எவரையும் வாக்கு எண்ணுகை அறையிலிருந்து வெளியேற்றுதல் வேண்டும். வாக்கு எண்ணுகை கூடத்திற்குள் உள்ள எவரும் கழிப்பறைக்குச் செல்ல வேண்டியிருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணம் பற்றி வெளியே செல்ல வேண்டியிருப்பின் வாக்கு எண்ணுகைச்செயல்முறையானது எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் வெளியே செல்லலாம்.

**5.9. தேர்தல் இரகசியம்(Secrecy) காத்தல் குறித்த எச்சரிக்கை**

**5.9.1.** மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர், நேர்வுக்கேற்ப, தேர்தல்களின் இரகசியம் காத்தல் பற்றியும் வாக்கு எண்ணிக்கை நடைமுறை குறித்தும் சுருக்கமாக விளக்குதல் வேண்டும்.

**5.10. பிற சங்கங்களின் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளை எண்ணுதல்**

**5.10.1.** இவ்வகை வாக்குச் சீட்டுகள் போடப்பட்ட வாக்குப் பெட்டிகளைத் திறந்து அதிலுள்ள வாக்குச் சீட்டுகளை வெளியில் எடுக்க வேண்டும். இத்தகைய வாக்குச்சீட்டு ஒவ்வொன்றும் அதன் செல்லத்தக்க நிலை குறித்து நன்கு கூர்ந்தாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**5.10.2.** இம்மாதிரியான வாக்குகளை எண்ணுகையின் போது கீழ்க்கண்ட நிலையில் இருக்கும் வாக்குச்சீட்டுகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**(1)** போலியானதொரு வாக்குச்சீட்டாக இருக்குமானால்;

(2) மிகவும் சேதமடைந்து அல்லது உருக்குலைந்து இது உண்மையான வாக்குச்சீட்டுதான் என அடையாளம் காணமுடியாத நிலையிலிருந்தால்;

**(3)** தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மிகையாகப் பல வேட்பாளர்களுக்கு வாக்கு அளிக்கப்பட்டிருந்தால்;

**(4)** அதில் வாக்கானது பதிவு செய்யப்படாது இருக்குமானால்;

**(5)** வாக்குச்சீட்டு மீது அளிக்கப்பட்டுள்ள வாக்குக் குறியீடானது எந்த வேட்பாளருக்கு வாக்கு அளிக்கப்பெற்றுள்ளது என்று சந்தேகத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருந்தால்;

**(6)** வாக்குச்சீட்டானது அதனோடு அனுப்பப் பெற்ற உறையில் வைத்துத் தேர்தல் நடத்தும் அலுவலருக்குத் திருப்பியனுப்பப்படாது இருக்குமானால்;

**(7)** வாக்குச்சீட்டில் வாக்கினைப் பதிவு செய்ய சரிக்குறியீடு ☑ இடுவதைத் தவிர வாக்காளரை அடையாளம் காட்டும் வகையிலும் மற்றும் அதன் மூலம் வாக்கு இரகசியம் காத்தல் எனும் விதிமுறையை மீறும் வகையில் வேறு ஏதேனும் குறியீடு செய்யப்பட்டிருந்தால் அல்லது எழுதப்பட்டிருந்தால்;

**5.10.3.** அஞ்சல் வாக்குச்சீட்டு வாயிலாக வாக்களிக்கும் வாக்காளர் தனது வாக்கினைச் சரிக்குறியீடு ☑ செய்து அளித்தல் வேண்டும் என கூறப்பட்டுள்ளது

## 6. வாக்கு எண்ணுகை

### 6.1. வாக்குப் பெட்டிகளை ஆய்வு செய்தல், திறத்தல் மற்றும் வாக்கு எண்ணுதல்

**6.1.1.** ஒரு சங்கம் / வாக்குச்சாவடி தொடர்புடைய வாக்குப் பெட்டியை அல்லது பெட்டிகளைப் பெற்றதும், தாள் முத்திரை நல்ல நிலையில் உள்ளதா என்பதையும் வாக்குப் பெட்டியில் ஒட்டப்பெற்ற பெயர் சீட்டில் குறிப்பிடப் பெற்ற குறிப்புகள் மற்றும் வாக்குப் பெட்டியோடு இணைந்த முகவரிச் சீட்டு ஆகியவை சங்கம் / வாக்குச் சாவடி எண். போன்றவற்றுடன் ஒத்திருக்கின்றதா என்பதையும் முதலில் சரிபார்க்கப்பட வேண்டும். வாக்குப் பெட்டியின் பெயர்ச்சீட்டில் குறிபிடப்பெற்ற வரிசை எண், வாக்குச்சாவடியில் பயன்படுத்தப் பெற்ற வாக்குப் பெட்டிகளின் மொத்த எண்ணிக்கை குறித்தும், குறிப்பிடப்பட்டிருக்கும். வாக்குப் பெட்டி அல்லது பெட்டிகளுடன் தாள் முத்திரைக் கணக்கும் இருக்கும். நீங்கள் உங்களது மேசையுடன் இணைந்த சங்கம் / வாக்குச்சாவடிக்கு அவை தொடர்புடையதுதானா என்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

**6.1.2.** வாக்கு எண்ணுகை முகவர்களை, வாக்குப் பெட்டிகளையும் அவற்றின் முத்திரைகளையும் வாக்கு எண்ணப்படும் மேசையில் அவற்றைத் திறப்பதற்கு முன்னர் அவைகள் முழுமை கெடாமலும் மோசடியான மாற்றம் செய்யப்படாமலும் உள்ளதென அவர்கள் மனநிறைவு அடையும் பொருட்டு ஆய்வு செய்து கொள்ள அனுமதித்தல் வேண்டும். வெளிப்பக்கமுள்ள முத்திரைகள், அதாவது உறையைப் பாதுகாக்க இடப்பட்டவை முக்கியமானதல்ல. அவை தொடர்பின் ஏதேனும் மறுப்புரை வருமாயின் அவற்றை புறந்தள்ளிவிடலாம். பெட்டியின் சன்னலில் உள்புறம் உள்ள தாள் முத்திரை மட்டுமே முழுமை கெடாது இருக்க வேண்டும். வாக்குப் பெட்டியின் சன்னல் இப்போதும் மூடப்பட்டிருக்கிறதென்பதையும், தாள் முத்திரையுடன் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதையும், பெட்டி திறக்கப்படவில்லை என்பதையும், அவர்களாகவே மனநிறைவு கொள்ளும் வகையில் நீங்கள் வாக்கு எண்ணுகை முகவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். பெட்டி மோசடியான மாற்றத்திற்குள்ளாகி இருக்கிறதென வாக்கு எண்ணுகை முகவர் எவரேனும் வாதிடுவார்களேயாயின், அவர்களின் கண்டுபிடிப்பை நேர்வுக்கேற்ப தேர்தல் அலுவலர் முடிவு செய்ய வேண்டி, உடனடியாக தேர்தல் அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**6.1.3.** பெட்டியின் சன்னலானது உள்புறம் உள்ள தாள் முத்திரையுடன் பாதுகாப்பாக முழுமை கெடாது இருப்பது மிகவும் முக்கியமானதாகும். பெட்டியின் பாதுகாப்பினை உறுதி செய்யும் நல்ல நிலையிலுள்ள அரக்கு முத்திரை மற்றும் வாக்குப் பெட்டியின் மீது ஒட்டப்பட்டிருக்கும் வாக்குச் சாவடி எண் போன்ற பிற விவரங்கள் பெட்டியைத் திறப்பதற்கு முன்னர் வாக்கு எண்ணுகை முகவர்களுக்கு காண்பிக்கப்படுதல் வேண்டும். பிற வகையில், தாள் முத்திரையானது வெளிப் பக்கத்திலிருந்து குத்தி ஊடுருவி சிதைக்கப்பட்டிருக்குமேயாயின், அதனை தேர்தல் அலுவலரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டும்.

**6.1.4.** வாக்குப் பெட்டிகள் மோசடி செய்யப்படவில்லையென உண்மையிலேயே நீங்கள் மனநிறைவு பெறுவிர்களாயின் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள நடை முறையைப் பின்பற்றுதல் வேண்டும்

**6.1.5.** வாக்குப் பெட்டியை திறக்கின்ற செயல்முறையில் முத்திரையுடன் கூடிய கம்பியையும் நூலினையும் அகற்றுதல் வேண்டும். சன்னலின் மேலுறையை சன்னல் தெரிகின்ற வகையில் நகர்த்துதல் வேண்டும். தாள் முத்திரையானது முழுமை கெடாது சன்னல் வழியாகத் தெரிகின்றதா என்பதைச் சரிபார்க்க வேண்டும். மேலும் வாக்குப் பெட்டியின் பொத்தான் எந்த ஒரு திசையிலும் திரும்பாது சிறு துவாரம் மூடப்பட்டுள்ளதா என்பதையும்

சரிபார்க்க வேண்டும். அடுத்து துளையினை ஏற்படுத்துவதற்காக தாள் முத்திரையையும் அதன் கீழே உள்ள கெட்டியான அட்டையையும் கூர்மையான பேனா கத்தி ஒன்றினை துளை வழியாக விரல் ஒன்றினை உட்செலுத்தி ஆதார வளைவினை திரும்ப இழுக்க வேண்டும். பின்னர், அப்பொத்தான் மேலும் எதிர்ப்புறமாகத் திரும்பும். அடுத்து, ஆதார வளைவுகளை திரும்பச் செல்லவிட்டு பொத்தான் நின்றுவிடும் வரை அவற்றைத் திருப்ப வேண்டும். மறுபடியும் ஆதார வளைவுகளை திரும்ப இழுத்து முடிவாக அது நின்றுவிடும் வரை பொத்தானை எதிர்ப்புறமாக மீண்டும் திருப்புதல் வேண்டும். இப்போது பெட்டி திறக்கப்பட்டு அப்பெட்டியின் மூடியைத் தூக்கிவிடலாம். அடுத்து வாக்கு எண்ணும் உதவியாளர் மூடியைத் திறந்து தாள் முத்திரைப் பகுதியை ஆய்வு செய்து பெட்டி முழுமை கெடாது உள்ளமையைக் கண்டறிய வாக்கு எண்ணுகை முகவர்களை அனுமதித்தல் வேண்டும். தாள் முத்திரையின் எஞ்சிய பகுதி மோசடியாக மாற்றம் செய்திருக்க வாய்ப்பில்லை என்பதைத் கண்டறிய வாக்கு எண்ணுகை முகவர்களை அனுமதிக்க வேண்டும். வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர் தாள் முத்திரை மீதான வரிசை எண்ணினை வாக்குச்சாவடித் தலைமை அலுவலரால் தேர்தல் அலுவலருக்கு அனுப்பப்பட்டு எண்ணும் மேசைக்கு தரப்பட்டுள்ள தாள் முத்திரைக் கணக்கில் (paper seal account) கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். எண்கள் சரியில்லாமல் இருக்குமேயாயின் அதனை தேர்தல் அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் அது தாள் முத்திரைக் கணக்கில் உள்ள தவறையோ அல்லது முதல் நிலையிலான மோசடியையோ சந்தேகிப்பதாகவோ அமையலாம்.

**6.1.6.** வாக்குச்சாவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட பெட்டிகள் பயன்படுத்தப்பட்டிருக்குமேயாயின், அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரிசை எண்ணுக்கிணங்க அவை திறக்கப்படுதல் வேண்டும். வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட அனைத்துப் பெட்டிகளும் ஒன்றன்பின் ஒன்றாக திறக்கப்படுதல் வேண்டும். பெட்டியில் (அல்லது பெட்டிகளில்) இருக்க வேண்டிய வாக்குச்சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் உள்ளபடியாக காணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் இரண்டுக்கும் இடையே எவையேனும் வேறுபாடு போன்ற விவரக் குறிப்புகள் ஆகியவற்றை சரிபார்ப்புக் குறிப்பின் (1), (2) மற்றும் (3) இனங்களுக்கு (இணைப்பு-1) எதிராகக் குறிப்பிட்டு தேர்தல் அலுவலரால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

**6.1.7.** இனங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு எதுவும் இருக்குமென எதிர்பார்ததலாகாது. எந்த வேறுபாடும் வாக்கு எண்ணும் மேற்பார்வையாளரால் தேர்தல் அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படல் வேண்டும். வாக்குப் பெட்டியில்

(அல்லது பெட்டிகளில்) காணப்படும் வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையில் காணப்படும் எந்த வேறுபாடும் வாக்குச்சாவடியில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும், சில வாக்காளர்கள் வாக்குச்சீட்டுடன் வெளியில் செல்வதால் அவ்வாறு ஏற்படுவதாக கருதப்படுகிறது. இதனை பொருட்படுத்த வேண்டியதில்லை. இருப்பினும், வாக்குப் பெட்டியில் மிகையான வாக்குகள் காணப்படுவதை அலட்சியப்படுத்தலாகாது. ஏனெனில் அது போலியான வாக்குச்சீட்டுகள் வாக்குப் பெட்டிக்குள் போடப்பட்டிருக்கும் என்பதைக் குறிப்பிடுவதாக அமையும். அத்தகைய வாக்குச்சீட்டினைக் கண்டுபிடித்து அவை நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

**6.1.8.** ஒரு வாக்குச்சாவடி தொடர்புடைய அனைத்து வாக்குச் சீட்டுகளையும் பிரித்து ரூபாய் நோட்டுகள் போன்று எண்ணப்பட்டு ஒவ்வொன்றும் 50 வாக்குச் சீட்டுகள் கொண்ட கட்டுகளாக்கப்படுதல் வேண்டும். எஞ்சியவை ஒரு தனிக் கட்டாக்கப்படவேண்டும். வாக்கு எண்ணும் அலுவலர் சரிபார்ப்புக் குறிப்பில் பகுதி II –ஆ **(இணைப்பு - 2)** கட்டங்களில் வேட்பாளர்களின் பெயர், வேட்பாளர் ஒவ்வொருவர் சார்பாக வாக்கு எண்ணுகையின்படி அவர் பெற்ற செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை போன்ற தேவைப்பட்ட விவரங்களை நிறைவு செய்தல் வேண்டும். ஐயப்பாட்டிற்குரிய வாக்குச்சீட்டுகள் எவையேனுமிருப்பின் அதன் எண்ணிக்கையினையும் அதற்காக வகை செய்யப்பட்டுள்ள கட்டத்தில் குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் செல்லுபடியான வாக்குகள் மற்றும் ஐயப்பாட்டிற்குரிய வாக்குகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கையைப் பதிவு செய்து, சரிபார்ப்புக் குறிப்பின் பகுதி IIல் தேர்தல் அலுவலர் ஒப்பமிடுதல் வேண்டும்.

**6.1.9.**வாக்குச்சீட்டுகளைக் கட்டுகளாக்கும்போது வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்கள் அனைத்தும் ஒரே பக்கத்தில் இருக்கின்ற முறையிலே அடுக்க வேண்டும்.

**6.1.10.** செல்லத்தக்க வாக்குச்சீட்டுகள் 50 சீட்டுகள் கொண்ட கட்டுகளையும், 50க்கும் குறைவான வாக்குச் சீட்டுக் கட்டையும் ரப்பர் பேண்டு (rubber band) அல்லது நூலால் கட்டப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டுகளை. ஐயப்பாட்டிற்குரிய வாக்குச்சீட்டுகளைக் கொண்ட கட்டுடன் இணைத்து பின்னர் பெரியதொரு கட்டாக்குதல் வேண்டும். ஐயப்பாட்டிற்குரிய வாக்குச்சீட்டுகள் கொண்ட கட்டை எப்பொழுதும் மேற்பகுதியில் வைத்திருத்தல் வேண்டும். சரிபார்ப்புக் குறிப்பும் வாக்குச்சீட்டுக் கணக்கு ஆகியவைகளையும் கட்டின் மேற்பகுதியில் வைக்கப்படுதல் வேண்டும்.

**6.1.11.** வாக்குகள் எண்ணிக்கை ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற செல்லத் தக்க வாக்குகள் குறித்து பகுதி II ஆ-வில் **(இணைப்பு – 2)** பதிவு செய்திட வேண்டும். செல்லத்தக்க முதல்

வாக்குச்சீட்டு எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளும்போது எந்த வேட்பாளரின் ஒதுக்கப்பட்ட வரிசை எண்ணுக்கு எதிரே முத்திரையிடப்பட்டுள்ளதோ அந்த வரிசை எண்ணுக்கு முதல் வாக்கு எண்ணும் உதவியாளர் அதற்கென உள்ள கலத்தில் ☑ என பதிவு செய்ய வேண்டும். வாக்குப் பதிவு செய்யப்படாத வேட்பாளரின் பெயருக்கு கீழே (-) எனக் குறிப்பிட வேண்டும். இதைப்போல அந்த வாக்குச்சீட்டின் அனைத்து பதிவுகளும் முற்றிலும் முழுமையாக படிக்கப்பட்டு படிவத்தில் பதிவு செய்யப்பட்ட பின் அடுத்த வாக்குச்சீட்டை எடுத்திட வேண்டும். முன் செய்ததைப் போலவே இரண்டாவது வாக்குச்சீட்டும் படிக்கப்பட வேண்டும். இதே முறையில் ஒவ்வொரு செல்லத்தக்க வாக்கும் எண்ணப்பட்டு உரியவாறு பதிவுகள் செய்யப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைவிட குறைவாக வாக்குப் பதிவு செய்யப்படும் நேர்வுகளில் பதிவு செய்யப்படாத வாக்குகளின் எண்ணிக்கை கலம் 3ல் குறிப்பிட வேண்டும். பதிவு செய்யப்பட்ட வாக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட வாக்குகள் மற்றும் செல்லத்தக்க வாக்குகளுடன் ஒத்திருக்க வேண்டும். அது போல் செல்லத்தக்க வாக்குகளின் மொத்த மதிப்பானது வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் மதிப்பும் மற்றும் பதிவு செய்யப்படாத வாக்குகளின் (கலம் 3) மதிப்புடன் ஒத்திருக்க வேண்டும்.

**6.1.12.** ஒவ்வொரு வாக்கு எண்ணும் தாளிலும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதற்குரிய பத்திகளை (column) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாக்கு எண்ணும் தாளிலும் 25 வாக்குச்சீட்டுகளுக்கான வரிசை எண்கள் இருக்கலாம். அனைத்து வாக்குத்தாள்களிலும் வேட்பாளர் பெற்றுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கையினை தனியாகப் பட்டியலிட்டு (Extract) இறுதியாகக் கணக்கிடப்பட்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் படிவம் - 22ல் **(இணைப்பு 5)** விவரங்கள் இருக்க வேண்டும்.

### 6.2. வாக்குச்சீட்டுகள் செல்லுபடியாகாதவை

**6.2.1.** ஒரு ஓட்டுச் சீட்டு கீழ்வரும் இனங்களில் நிராகரிக்கப்பட வேண்டும். (Reject).

(1) வாக்காளர் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு அல்லது எழுத்து காணப்படுதல்.

(2) அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாதது ;

(3) பெண்கள் / ஆதிதிராவிடர் - பழங்குடியினர் / பொது ஆகிய மூன்று பிரிவுகளில் எந்த ஒரு பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நபர்களைவிட கூடுதலான நபர்களுக்கு வாக்களித்திருத்தல்;

(4) தேர்தல் அலுவலராலோ, வாக்குச் சாவடி அலுவலராலோ வழங்கப்படாத வேறு ஒரு வாக்குச் சீட்டு ;

(5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது ;

(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதது ;

(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருத்தல் ;

(8) தொடர்புடைய (relevant) வாக்குச் சீட்டாக இல்லாதது.

**6.2.2.** மேலே இனம் (7)ல் சொல்லப்பட்ட குறையானது தேர்தல் அலுவலர் அல்லது வாக்குச் சாவடி அலுவலர் ஆகியோரின் தவறுதலினாலோ (mistake) அல்லது விடுதலினாலோ (failure) ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் அலுவலர் கருதும் நிலையில் (satisfy) அக்காரணம் பற்றி மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

**6.2.3.** வாக்குச் சீட்டில், குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்காளர் வாக்களிக்க விருப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறியக்கூடிய நிலையில், அவரது முத்திரை (mark) தெளிவாக இல்லை மற்றும் ஒரு தடவைக்கு மேல் முத்திரை இடப்பட்டுள்ளது என்ற காரணங்களினால் மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

**6.2.4.** தேர்தல் அலுவலர் மட்டுமே வாக்குச் சீட்டினை நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராவார்.

## 7. முடிவுகள் அறிவித்தல்

### 7.1. ஒன்றுக்கு மேற்பட்ட மையங்களில் வாக்கு எண்ணும் பணி நடைபெற்றால் தேர்தல் முடிவுகளை அறிவித்தல்

**7.1.1.** தேர்தல் முடிவுகள் தேர்தல் அலுவலரால் அறிவிக்கப்படுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கு எண்ணுகை மையங்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கும் இடங்களில் தேர்தல் அலுவலரால் இவ்வகையில் தனக்கு உதவியாக நியமிக்கப்பட்ட முதன்மை வாக்குப் பதிவு அலுவலர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர்களிடமிருந்து வேட்பாளரின் பெயர்கள் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை ஆகிய விபரங்கள் **(இணைப்பு-2)-ல்** பெறுவார். முடிவு விவரத்தாள்கள் அனைத்திலும், அஞ்சல்

வாக்குச்சீட்டுகள் தொடர்பான கணக்குத் தாள்களிலும் உள்ள இலக்கங்களை ஒருங்கிணைப்பதன் வாயிலாக ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கையைத் தொகுத்துக் கொண்டு பின்னர் படிவம் 22ல் **(இணைப்பு – 5)** முடிவுகளை அறிவிப்பார்.

**7.2. ஒன்றுக்கு மேற்பட்ட மையங்கள் இல்லாத இனங்கள்**

**7.2.1.** முதன்மை வாக்குச்சாவடி அலுவலரிடம் பொறுப்புகள் ஒப்டைக்கப்படாத, தேர்தல் அலுவலர் மற்றும் அவருக்கு உதவியாக இருக்கும் வாக்கு எண்ணுகை அலுவலர்களை மட்டுமே கொண்ட, தேர்தல் அலுவலரின் நேரடி மேற்பார்வையில் நடைபெறும் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகளை தேர்தல் அலுவலரே நேரடியாக படிவம் 22ல் **(இணைப்பு -5)** உரிய விபரங்களுடன் வெளியிடுவார்.

**7.3. சமமான வாக்குகள்**

**7.3.1.** முடிவு விவரத் தாளில் உள்ள பதிவுகள், எந்த வேட்பாளருக்குப் பெருமளவில் செல்லத்தக்க வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாகக் காட்டும். போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் எந்த இடம் அல்லது தொகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அதில் பெருமளவு வாக்குகளைப் பெற்றுள்ளவர்களில் இருவரோ அல்லது இருவருக்கும் மேற்பட்டவரோ சமமான வாக்குகளைப் பெற்று, ஒரு வாக்கினைக் கூடுதலாகச் சேர்ப்பதன் வாயிலாகவே அவருள் ஒருவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். இத்தகைய நிலையில் தேர்தல் அலுவலர் வேட்பாளர்களின் பெயர்களை ஒரே அளவிலான தனித்தனி துண்டுச் சீட்டுகளில் எழுதி குலுக்கல் மூலம் தேர்ந்தெடுத்து, குலுக்கலில் எந்த வேட்பாளரின் பெயர் வருகிறதோ அவரே ஒரு கூடுதல் வாக்கினை பெற்றவராகக் கருதுதல் வேண்டும். அதன்படி அவரே தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

**7.3.2.** குலுக்கல் நேர்வில், தேர்தல் அலுவலர் மிகச் சரியான முறையில் ஒரே அளவிலும், ஒரே வண்ணத்திலும் உள்ள துண்டுத் தாள்களைப் பயன்படுத்துதல் வேண்டும். தொடர்புடைய வேட்பாளரிடம் அல்லது அவர்களின் தேர்தல் முகவர்களிடம், வேட்பாளர்களின் பெயர்கள் எழுதப்பட்ட துண்டுத் தாள்களைக் காட்டி, குலுக்கலில் சேர்ப்பதற்கு முன் மிகச் சரியான ஒத்த அளவில் அவற்றை மடித்தல் வேண்டும். பின்னர் அவற்றை ஒன்று சேர்த்துக் குலுக்கி எடுக்கப்படும் ஒரு துண்டுச் சீட்டினை அங்கிருப்போரிடம் காட்டுதல் வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட துண்டுச் சீடடில் எந்த வேட்பாளரின் பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ அவரே அந்தக் கூடுதல் வாக்கினைப் பெற்றவராகக் கருதப்படுதல் வேண்டும். அடுத்து, தேர்தல்

அலுவலர் தேர்தல் முடிவு அறிவிப்புப் படிவத்தை (படிவம் 22) **(இணைப்பு – 5)** நிறைவு செய்து அறிவிப்பினையும் முடிவு செய்தல் வேண்டும். இப்படிவத்தை போதுமான எண்ணிக்கையில் தயாரித்தல் வேண்டும். தேர்தல் அலுவலர் உடனடியாக அவ்வறிக்கையின் ஒரு படியை வாக்கு எண்ணுகை மையத்தில் ஒட்டுதல் வேண்டும்.

**7.4. பதிவேடு**

**7.4.1** தேர்தல் அலுவலர், இதற்கென தனியான ஓர் பதிவேட்டில் தேர்தல் முடிவுகளை பதிவு செய்து கையொப்பமிடல் வேண்டும்.

**7.5. முடிவு வெளியிடுதல்**

**7.5.1.** முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் சங்க அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் அல்லது தேர்தல் அலுவலரால் தெரிவிக்கப்படும் (specify) இடத்தில் வெளியிடப்பட வேண்டும்.

**7.5.2.** தேர்தல் முடிவு பெற்ற உடன், தேர்தல் அலுவலர் படிவம் 22-ல் **(இணைப்பு – 5)**, தேர்தல் முடிவுகளை சங்கத்திற்கும், தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அலுவலர், மாவட்ட தேர்தல் அலுவலர், மற்றும் விதி 53(1)-ன் கீழ் தேர்தல் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால் அத்தேர்தல் அலுவலர் ஆகியோருக்கும் அனுப்ப வேண்டும்.

**7.5.3.** இத் தேர்தல்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர் எவரேனும் அல்லது அவர்களின் தேர்தல் முகவர்கள் எவரேனும் கேட்டுக் கொண்டால் படிவம் 22-ல் (இணைப்பு – 5) அமைந்த தாளின் படியினை பெற்றுக் கொள்ளவோ அல்லது விவரங்களை குறித்துக் கொள்ளவோ அனுமதிக்கலாம்.

**8. முடிவுரை:**

சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, நியாயமான, நேர்மையான (Free and Fair), முறையில், உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களின் தேர்தலில் மிக முக்கிய பகுதியான வாக்கு எண்ணுகையில் உங்களது கடமைகளையும், பொறுப்புகளையும், பங்களிப்பினையும் எவ்வித புகார்களுக்கும் குறைபாடுகளுக்கும் இடமின்றி திறம்பட செயலாற்றினீர்கள், என்ற மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் செல்லுங்கள்.

************

## இணைப்பு – 1

**வாக்குகளை எண்ணுவதற்கான சரிபார்ப்புக் குறிப்பு**

கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

வாக்கு எண்ணுகை சரிபார்ப்புக் குறிப்பு
பகுதி I

(1) வாக்குச்சீட்டுக் கணக்குத் தாளில் பகுதி 1-க்கேற்ப வாக்குப் பெட்டியில் (அல்லது பெட்டிகளில்) இருக்க வேண்டிய வாக்குச்சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை
(2) உள்ளபடியாகக் காணப்படும் வாக்குச்சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை
(3) கண்டறியப்பட்ட முரண்பாடு

தேர்தல் அலுவலரின் கையொப்பம்

பகுதி II (அ)

| தொடர் எண் | வேட்பாளரின் பெயர் | அளிக்கப்பட்ட செல்லத்தக்க வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| | | |
| | | |
| மொத்தம் | | |
| ஐயப்பாட்டிற்குரிய வாக்குச் சீட்டுகள் | | |

இடம்:

நாள்: தேர்தல் அலுவலரின் கையொப்பம்

## இணைப்பு – 2

பகுதி II (ஆ)

வாக்கு எண்ணும் தாள்

செல்லத் தக்க (முழுமையாக பதிவு செய்யப்படாத வாக்குகள் உள்ளிட்டு)
வாக்குகள் மட்டும்

.... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

| செல்லத் தக்க வாக்குச்சீட்டுகள் வரிசை எண்கள் | வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் விவரம் | | | | | முழுமையாக பதிவு செய்யப்படாத வாக்குகள் | மொத்தம் கலம் (2) + (3) |
|---|---|---|---|---|---|---|---|
| | பெயர் மற்றும் ஒதுக்கப்பட்ட வரிசை எண் | பெயர் மற்றும் ஒதுக்கப்பட்ட வரிசை எண் | பெயர் மற்றும் ஒதுக்கப்பட்ட வரிசை எண் | பெயர் மற்றும் ஒதுக்கப்பட்ட வரிசை எண் | பெயர் மற்றும் ஒதுக்கப்பட்ட வரிசை எண் | | |
| (1) | (2) | | | | | (3) | (4) |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |
| 6 | | | | | | | |
| 7 | | | | | | | |
| 8 | | | | | | | |
| 9 | | | | | | | |
| 10 | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

வாக்குச்சாவடி எண்

இடம்:

நாள்: முதன்மை வாக்குப்பதிவு அலுவலர்

குறிப்பு:

(1) வாக்குச்சீட்டில் காணப்படும் வரிசை எண்ணை குறித்தல் கூடாது.
(2) போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதிகரித்துக் கொள்ள வேண்டும்.
(3) ஒரு வாக்கு எண்ணும் தாளில் 25 வாக்குச்சீட்டு வரிசை எண்கள் இருக்கலாம்.

## இணைப்பு- 3

<u>படிவம்</u>

## வாக்கு எண்ணுகை முகவர் நியமனம்

மாவட்டம் வட்டம் கூட்டுறவுச் சங்கத்தின்

தொகுதியிலிருந்து நிர்வாகக் குழுவிற்குத் தேர்தல்

பெறுநர்

தேர்தல் அலுவலர்

…………

……………….மேற்படி தேர்தலுக்கு வேட்பாளராகிய…………………………………..

(வேட்பாளர் பெயர்) என்ற நான் இன்றைய நாளிலிருந்து மேற்சொன்ன தேர்தலில் என்னுடைய வாக்கு எண்ணுகை முகவராக………………….சார்ந்த திரு……………………இதன் மூலம் நியமித்துள்ளேன் என்று அறிவிக்கின்றேன்.

இடம் :

நாள் : வேட்பாளரின் கையொப்பம்

மேற்படி நியமனத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இடம்

நாள் முகவரின் கையொப்பம்

**இணைப்பு 4**

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... கூட்டுறவுச் சங்கம்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

வாக்கு எண்ணுகை முகவர் / மாற்று முகவர்

**அனுமதி / அடையாளச் சீட்டு**

வாக்குச் சாவடி எண்......................................

இடம்:

நாள்:

வேட்பாளரின் பெயர்

முகவரின் பெயர் மற்றும் முகவரி

முகவரின் கையொப்பம்

தேர்தல் அலுவலர் கையொப்பம்

குறிப்பு:

1) மாற்றத்தக்கதல்ல.
2) எந்த வாக்குச் சாவடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ. அந்த வாக்குச்சாவடிக்கு மட்டுமே இது செல்லத்தக்கதாகும்.

## இணைப்பு- 5

**<u>படிவம் எண்.22</u>**

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.52 உபவிதி (17) உட்கூறு (சி) பார்க்க)

**நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவுகள் பற்றிய அறிவிப்பு**

- ………………………… கூட்டுறவுச் சங்கம்
- …………………….. வட்டம்
- ……………………… மாவட்டம்
- ……………………… தொகுதிக்கான தேர்தல்

| வேட்பாளரின் பெயர் | வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | |

- …………. (வேட்பாளரின் பெயர்)
- …………. (வேட்பாளரின் முகவரி)

என்பவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார் என நான் அறிவிக்கிறேன்.

ஆம் வருடம் மாதம் நாளிடப்பட்டது

தேர்தல் அலுவலரின் கையொப்பம்.